09.03.2026

STC.974/2024

PW-1 சிவசங்கரி த/பெ.ராஜாராம்

**முதல் விசாரணை தொடர்ச்சி**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

செல்வன் முருகன் என்பவர் செக்காணூரணி அரசு தொழிற்கல்வியில் சேர்ந்து படிப்பதாக ஆஜர் எதிரி அனுப்பிய பதில் கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தபடியால் மேற்படி செக்காணூரணி அரசு தொழிற்கல்வியில் விசாரணை செய்த போது செக்காணூரணி அரசு தொழிற்கல்வியின் முதல்வர் அவர்கள் எனக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிய கடிதத்தில் செல்வன் முருகன் த/பெ.முத்துக்குமார் என்பவர் இந்நிலையத்தில் பற்றவைப்பவர் தொழிற்பிரிவில் 21.09.2023 அன்று பயிற்சியில் சேர்ந்துள்ளார் என்றும் தற்போது அப்பயிற்சியாளர் 27.12.2023 முதல் பயிற்சிக்கு வருகை தரவில்லை என்றும் குறிப்பிட்டு அனுப்பியிருந்தார். **அந்த கடிதம் மற்றும் மின்னஞ்சல் குறிப்பு ம.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எனது விசாரணையில் 13.09.2023ம் தேதி செல்வன் முருகன் எந்த தொழிற்பயிற்சி பள்ளியிலும் படிக்கவில்லை என்பதும் அன்றைய தினம் கர்ணன் இருசக்கர வாகனம் பழுதுகாப்பகத்தில் கடையில் உதவியாளராக பணியில் அமர்த்தப்பட்டிருந்த விபரம் ஊர்சிதப்படுத்தப்பட்டது.